# அன்புக் கட்டளை

கடற்கரைக்கு வரும்பொழுதெல்லாம் இது தான் யோசனை. காதல் அன்பின் நிழல் அன்றோ பொறாமை. நிழல் சில சமயம் நீண்டு பரவுகிறது. சில சமயம் குறுகி விழுகிறது, சில சமயம் புலனாவதில்லை. எனக்கு இத்தகைய எண்ணம் உண்டானது பற்றிக் கூசுவானேன்? விஜியிடம் அதை வெளியிடத் தயங்குவானேன்? அவள் சிறுமைப்படமாட்டாள். என் ஆசை உடைமையாகிய அவள் பால் நான் கொண்டுள்ள அன்பும் அக்கரையும்தான் என் மருட்சிக்கும் எண்ணத்திற்கும் மூலம் அன்றோ? என் விஜி எல்லோருடனும் கூடிக் கும்மாளமாகப் பழகுவது என்றால்தான் இயலவில்லை இதை விஜி அறிவாளாயின் கனிவும் உவகையும் அன்றோ மிதக்கும், அந்த அழகிய கண்களிலே! "கண்ணே! நீ என்னவள்!" என உரிமை பாராட்டும் தோரணையிலே நான் என்னுடைய எண்ணத்தை வெளியிடுவேனாயின் கசக்குமோ விஜிக்கு? அவளுடைய கொவ்வை இதழ்களிலே முல்லை முறுவலன்றோ அரும்பும்? மகிழ்வுடன் ஏற்பாளே என் அன்புக் கட்டளையை!

ஒரு நாள் கேட்டுவிட்டேன், என் தாபத்தைக் குறிப்பிட்டுவிட்டேன். "விஜி நாலு பேருக்கிடையே நாம் இருக்கும்பொழுதும் நீ ஏன் என்னிடம் சிறிது தனிப்பட்ட முறையில் பழகக்கூடாது? நம் உறவுதான் மாணவர்களுக்கெல்லாம் தெரியுமே!" என்று வினவினேன்.

இதற்கு விஜயா அளித்த விடை என்னைத் துணுக்குறச் செய்தது. "அந்த நாலுபேருக்கு நடுவிலேயே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கலாமே? கேட்கிறது தானே?" என்றாள் அவள், புருவங்களை உயர்த்தி!

ஆம் நான் ஏன் தனிமையிலே கேட்கிறேன்? அந்த 'நாலுபேருக்கு' மத்தியிலே விஜியை உரிமையுடன் கேட்கவில்லையே நான்? கேட்க முடியுமா? காதலுக்கும் சில கட்டுத் திட்டங்கள், எல்லைகள் இருக்கின்றனவே! ஆனால், நான் விஜியினிடம் எதிர்பார்ப்பது எதுவும் தவறானதல்லவே! என் மனதை அவளிடம் உள்ளது உள்ளபடி நான் சொல்லவில்லையாதலால் அவள் புரிந்துகொள்ளவில்லை! ஆம், அழகாக, நேர்த்தியாக அவளிடம் என் உள்ளத்தை விளங்க வைக்காத குற்றம் எனதன்றோ?

துணுக்கத்தைச் சற்றே சமாளித்துக் கொண்டேன் நான். "அதற்குச் சொல்லவில்லை விஜி! நீ என்னிடம் அதிகமான உரிமை காட்டிப் பழக முடியாதுதான். அது நன்றாக இராது. ஆனால் நீ மற்ற மாணவர்களோடு பழகுவதைச் சற்றுக் குறைத்துக் கொண்டால்?........ பிரச்னை தீர்ந்தது, இல்லையா?" என்று கேட்டேன் - கடல் அலைகளைப் பார்த்தவாறு.

"ஓஹோஹோ ஹோ!!" என்று சிரித்தாள் விஜி. நான் எதிர்பார்த்தபடியே பெருமிதம் மிதந்தது அவள் முகத்திலே. "சரிதான் சங்கர், தெரிந்தது, புரிந்தது!" என்றாள் குஷியாக.

அவள் வாய்திறந்து என் விருப்பப்படி செய்வதாகக் கூறாவிடினும், நான் அவளிடம் இணக்கத்தையே எதிர்பார்த்தேன். அதனால் பேச்சை வேறு விதமாக வளைத்தேன்.

ஆனால் மறுநாள் கல்லூரியிலே என் வேதனை பெருகிற்று எதிர்பார்த்த ஆறுதல் கிட்டாததால் கலக்கம் வளர்ந்தது. விஜி என்றும் போலவே கலகலப்பாகப் பழகினாள் மாணவர்களோடு. என் சொற்களை அவள் நினைவு வைத்திருக்கிறாள் என்பதற்கு லவலேசம் ருசு தென்படவில்லை. அவளை அதிகம் கவனித்ததனாலோ என்னவோ தினத்தைவிட அதிகமாகக் கும்மாளம் போடுவதாக எனக்குத் தோன்றிற்று! என் நெஞ்சம் திகுதிகுவென எரிந்தது. அவளை வெறித்து வெறித்துப் பார்த்தேன். அவள் செய்த புன்னகைகள் என்

மென்னியை அடைத்தன. என் ஆற்றாமையை நானே கண்டிந்துக்கொண்டேன். திடீரென்று அவர்களிடம் விலகிப் பழகமுடியுமா? மெள்ளத்தானே 'பழக்கத்தைக் குறைத்துக் கொள்ளலாம் - என்றெல்லாம் சொல்லிக்கொண்டேன். மாலையில் உலாவ, வழக்கம் போல் விஜி, குஷாலாக என்னுடன் கிளம்பிவிடவே, நான் மன நிறைவு பெற்றேன். உணவுப் பண்டம் கண்டதும் வேற்றுமை நீங்கி நெருங்கி வரும் குழந்தை போலாகிவிட்டேன். பொல்லாத பொறாமை அடங்கிவிட்டது பற்றிச் சந்தோஷித்தவாறே, கடற்கரைக்கு அவளுடன் புறப்பட்டேன்.

இப்படியே ஒரு வாரம் போயிற்று. ஏழு நாட்களும் இதே போல் மனப்பதட்டம், சுய சமாதானம், மறு பிறவி எடுக்கும் நம்பிக்கை, ஆட்சேப சமாதானங்கள். சீரான போலிப் பல் வரிசை போன்று ஒரு போலியான அமைப்பும் அமைதியும், இந்த நிகழ்ச்சிகளிலும் உணர்ச்சிகளிலும் நிலவின. விஜயா அப்படியேதான் இருந்தாள். பிற மாணவரோடு சகஜபாவம் குன்றவில்லை. என்னுடன் உலாவ வருவதிலும் அவளுடைய ஆர்வம் குறையவில்லை. மீண்டும் விஜயாவிடம் என் வேதனை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. மெல்ல 'விஜி, நீ என் கலக்கத்தைக் குறைப்பாய் என்றல்லவா எண்ணினேன்?' என வினவினேன்.

விஜயா சிரித்தாள். "உங்களுக்கு ஏன் இத்தகைய எண்ணங்கள் சங்கர்?" என்று கேட்டாள், முறுவலித்து. காதலின் சகாவாகிய பொறாமை என்னிடம் குடிகொண்டிருப்பது தவறாகுமோ என நான் கேட்க யோசிக்கும்பொழுது விஜயா, "உங்கள் விஷயத்திலே எனக்கு இவ்வாறு தோன்றுவதில்லையே! நீங்கள் மாணவிகளோடு பேசினால் நான் ஏதாவது நினைக்கிறேனா?" என்று கேட்டாள்.

"நீ மாணவர்களோடு பழகுவது போல அத்தனை நெருங்கி மாணவிகளோடு நான் பழகுகிறேனா!" என்று கேட்டேன் ரோசமுடன்.

"பழகிப் பாருங்களேன், நான் ஏதாவது தடை செய்கிறேனா என்று!" எனச் சவால் விடுத்தாள் விஜயா.

"அப்படியானால் உனக்கு என்மேல் அன்பு அதிகம் இல்லை என்றுதான் நான் நினைக்கணும்!" என்று சொல்லிப் பார்த்தேன்.

"அது தப்பு!" என்று கூறிவிட்டாள் அவள். விஜயாவின் இந்த விமர்சனத்திற்கு விளக்கம் யாது? "இது போன்ற விஷயங்களைக்கொண்டு காதலை அளவெடுப்பது தவறு!" என்றாளோ? அல்லது, "என் அன்பு குறைவு என்று நீங்கள் நினைப்பது தவறு!" என்றாளோ? ஆகக்கூடி நான் சொல்வது, பொறாமையினால் பேசுவது, சரியல்லதான் போலும்! ஆம், பொறாமை ஒரு பேய்! விஜிக்கு இந்தப் பேய்க்குணம் கிடையாது. விஜியின் சலனமற்ற அன்பின் முன்னே நான் என் சஞ்சலத்தை ஒருவாறு கட்டுப்படுத்தினேன். "என்னமோ எனக்கு அசட்டுப் பிசட்டு எண்ணங்கள்தான் விஜி!" என்று ஒப்புக்கொண்டேன். விஜயா காதலுடன் என்னை நோக்கி எனக்கு ஒரு அன்புக் கட்டளை விதித்தாள். "நான் மாணவர்களோடு 'ப்ரீ'யாக இருக்கிறேன் என்பதினால் நீங்கள் மனசை அலட்டிக் கொள்ளவே கூடாது, சங்கர்! தெரியுமா?" என்று சொன்னாள் ஏற்றுக்கொண்டேன்.

அன்று ஏற்பட்ட தென்பு சில நாள்வரை நிலைத்தது. மனப்பக்குவமும் அமைதியும் நிலைநாட்டிவிட முயன்றேன். ஆனால் இந்த நிலைமையும் ஒரு நாள் பொதிமணலிலே அகப்பட்டுக்கொண்டுவிட்டது.

ஒரு நாள் கடற்கரையிலே உலாவி வருகையிலே ஒரு மாணவன் ஏதோ புத்தகம் பற்றி விஜயாவைக் கேட்க வந்தான். பேச வேண்டிய விஷயம் முடிந்ததுமே அவனை விஜி அனுப்பிவிட்டிருக்கலாம். அப்படி உடனே போகச் சொல்வது அவளுக்குச்

சரியாகப்படவில்லை போலிருக்கிறது, "நீங்களும் எங்களுடன் வரலாமே!" என்றாள் அவன் குஷியாக உடனே ஒப்புக்கொண்டான். நான் கலங்கிப்போனேன்.

ஒடுங்கிக் கிடந்த உள்ளத்திலே எண்ணங்களை விசாலமாக்க முயன்றவாறே, உலாப் படலத்தை ஒருவாறு சமாளித்துக் கொண்டிருந்தேன். அழைப்பு விடுத்த கடமையை எண்ணி விஜயா அவனுடன் அதிகம் பேச வேண்டியதாயிற்று.

அவ்வப்போது அவர்களுடன் பேசத் திரும்புவதும், கடல் அலைகளை நோக்குவதுமாக நான் இருந்தேன்.

"போகட்டுமா?" என்று அந்த மாணவன் அவளிடம் கேட்பதை நான் கவனித்தும் திரும்பவில்லை. அவன் சென்றபின் திரும்ப எண்ணினேன். விஜி அவனிடம், "நாளைக்கும் இப்படி எங்களுடன் வாருங்களேன்!" எனவும், திடுக்குற்றேன், திரும்பிப் பார்த்தேன்.

"ஓ, எஸ்!" என கனஜோராக, புன்னகை பொழியும் முகமுடன் விஜியிடம் விடைபெற்றுச் செல்லும் அவனையும், அவனுடைய பூரிப்பையும் கண்டு கலங்கவே திரும்பினேன். "நாழியாயிற்றே, நாமும் போகலாமா;" என விஜி கேட்க, ஒரு நிமிஷம் தான் உள்ளது என்பதை அறியாது திரும்பினேன். போக நாங்களும் எழுந்தோம். "ஏன் நாளைக்கும் அவனை வரச்சொன்னாய் விஜி! இன்றைக்கு நான்பட்ட அவஸ்தை போதாதோ?" என்று கேட்டேன் அவளை.

"அப்படியா? எனக்குத் தெரியுமா? அந்த மாதிரி எண்ணங்கள் விட்டாச்சுன்னா நினைச்சேன்?" என ஒரு தினுசாக வினவினாள் விஜி.

"சோதனை பலமாக ஏற்படவே உறுதி குலைந்து விட்டது, விஜயா," என்று ஒப்புக்கொண்டேன் நான்.

"பார்க்கலாம் உங்கள் மனசை என்று நானும் எண்ணினேன் சங்கர்!" என்று அவளும் ஒப்புக்கொண்டாள்.

"நாளைக்கு அவனை வரச் சொல்லிவிட்டாயே! எப்படித் தவிர்ப்பது! எங்காவது வேறு இடம் செல்வோம்!" என்று கூறினேன். சம்மதித்துவிட்டாள் அவள். இதற்குப் பிறகும் விஜியின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் நான் துன்புறுத்தலாமா? கோழையல்ல அவள். பல புருஷர்களுடன், மாணவர்களுடன், பழகுவது தவறு என்றோ, தனக்கு அதனால் தூய்மைக் குறைவு என்றோ, பயந்து நடுங்குகிறவள் அல்ல; தன்னைப் பற்றி, தனக்கில்லாத அக்கரை யாருக்கு? என நிமிர்ந்து நிற்கும் புதுமைப்பெண். அவளை நான் சந்தேகிப்பது போலக் காட்டிக்கொள்வது அழகா? அவளை அடக்க முயல்வது சரியாகுமா?

வருடாந்தர விடுமுறை நெருங்கியது. காதல் ஜோடி நாங்கள், வரவிருந்த பிரிவை வெகு கவலையுடன் எதிர்பார்த்து ஏங்கிவிடத் தொடங்கினோம். அவள் தன் ஊர் புறப்பட இன்னும் பத்து நாள் கூட இல்லை.

அவள் புறப்பட இருந்ததை இரண்டு நாள் தாமதப்படுத்தலாமா என்று கூட எண்ணம் எனக்கு. அப்படி இருக்கும்போது ஒரு மாலை நாங்கள் கடற்கரையில் உட்கார்ந்திருந்தபோது நடராஜ் வந்தான். "நானும் அன்றைக்குத்தான் புறப்படுகிறேன்!" என்றான் விஜியிடம். "ஓ, அது நான் எதிர்பார்த்ததுதான்!" என்று சொன்னாள் விஜி. பிறகு சற்றுநேரம் அவளுடன் வார்த்தையாடிவிட்டுப் போனான் அவன். ஏனோ எனக்கு விஜியிடம் பேச்சுக்கொடுக்கவே தென்பில்லை; ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. களுக்கென விஜயா சிரித்தது கேட்டுத் திகைப்புடன் அவளைப் பார்த்தேன். "என்ன சங்கர்" என அவள் என்னைக் கேட்டாள்.

"எதற்கு என்ன? நான் எதுவும் பேசவில்லையே!" என்றோன். "வாய் திறந்து சொல்லாவிட்டாலும் உங்கள் முகம் சொல்கிறதே!" என்றாள் அவள்.

"என்ன சொல்கிறது என் முகம்!"

"நான் நடராஜனுடன் பேசினது பிடிக்கவில்லை உங்களுக்கு!" என்றாள் அவள்.

ஆம், உண்மை. அவன் எங்களை அணுகியபோது என் வயிற்றைக் கலக்கியது. அவன் பேசிய விஷயம் என் உணர்வையே பறித்துவிட்டது. விஜி கண்டுகொண்டுவிட்டாள்.

"ஆம், விஜி! அவன் ஏன் பேச வந்தான் என்றுதான் இருக்கிறது!" என்று பதிலளித்தேன்.

"இப்படியெல்லாம் இருந்தால் நாம் எப்படி இல்லறம் ஆகிய நல்லறம் நடத்துவது சங்கர்?" என்று கூறி, குறுநகை புரிந்தாள் விஜயா, நான் உவகை எய்தினேன்.

"நாம் இல்லறம் நடத்தப்போவது உண்மைதானே, விஜி! இப்போது விடுமுறை வருவதை எண்ணும்போது, மற்றச் சந்தோஷ நினைப்பு வருவது கஷ்டமாகிறது!" என்றேன் வேதனை தாளாமல்.

"உண்மையில்லாமல்? எப்படியும் இல்லறம் நடத்தத்தான் போகிறோம்! சேர்ந்து நடத்துவோமோ, தனித்தனியே நடத்துவோமோ..... ஆகக்கூடி..........

அவள் விளையாட்டுக்குச் சொன்னாளாயினும் நான் திகைப்புற்றேன். என் வேதனையை அறிந்ததும் அவள், "அச்சச்சோ, சும்மாச் சொன்னேன் - இது தெரியவில்லையே!" என்று என்னை ஆசுவாசப்படுத்தத் தொடங்கிவிட்டாள். அவளுடைய குழந்தைத் தனமான குறும்புப் பேச்சிலே மகிழ்ச்சி காணாமல் துணுக்குற்றுவிட்ட என் அறியாமையை நொந்துகொண்டுவிட்டு, அவளுடன் சந்தோஷமாகப் பேச எண்ணினேன். ஆனால் வரவிருந்த பிரிவின் துயர் என்னைச் சற்றுத் துன்புறுத்தியது. "நடராஜனும் நீயும் ஒரே நாள், ஒரே வண்டியிலே போகவேண்டாமே, விஜி! நீ இரண்டுநாள் கழித்துப் போயேன்!" என்றேன் - என் வேதனையைக் குறைக்கக்கூடிய இரண்டு விஷயங்களை ஒரே சொல்லில் விளக்கினேன்.

"ஒரே நாளில், ஒரே வண்டியில் போனால் உறுத்துமா உங்களுக்கு! ஒரே ஊருக்குத்தானே இருவரும் போகிறோம்!" என்று கேட்டுவிட்டாள் விஜி. பிறகு "நல்ல எண்ணம்!" என்று என்னை அன்புப் பரிகாசம் செய்தாள்!

விஜயாவை ரயிலேற்றிவிடச் சென்றபொழுது, நான் பயந்ததுபோலவே ஆயிற்று. நடராஜன் வந்திருந்தான். விஜயாவுடன் ஒரே பெட்டியில் பயணம் செய்யும் பகிரங்க நோக்கமுடன் எங்களை அணுகினான். அவளை அவளுடைய வீட்டின் வாசற்படி வரை அழைத்துச் சென்று வீட்டில் சேர்ப்பிக்கும் பொறுப்பும் ஏற்றான். அவன் செய்த அட்டகாசம் என் தென்பை பறித்துவிட்டது. வண்டி வந்ததும் விஜயாவுக்கு அவன் இடம் செய்துகொடுத்த பரபரப்பும், எங்களுக்குக் குளிர்ந்த பானகம் அளித்த சுறுசுறுப்பும், அவன் பேசிய தோரணையும், என்னைச் செயலற்றுக் கம்பமாக்கிவிட்டன. விஜயா நடராஜனுக்கு நன்றியுரைத்தபோது நான் சிறுமைப்பட்டேன். வண்டி நகரும்பொழுதும், பேசத் தோன்றாமல் நின்றேன். ஓடும் வண்டியிலே, அடுத்தடுத்த ஜன்னலருகு அமர்ந்து எனக்கு "டாட்டா" செய்தவாறே அவர்கள் இருவரும் ஒரே உருவம்போல தோன்றியவாறு மறைந்ததை, என்னை மறந்து துன்பமுடன் நோக்கிவிட்டு, என் வீட்டிற்குத் திரும்பினேன் நான்.

"விஜியைப் பிரிந்து விடுமுறையை எங்ஙனம் கழிப்பது?" என்று விடுமுறையின் துவக்கத்திலே கவன்ற நான், விடுமுறையின் இறுதியிலே, "விடுமுறை முடிந்து கல்லூரி திறந்ததும் விஜியை எவ்வாறு பார்ப்பது நான்?" எனக் குழம்பி நின்றேன்!

கல்லூரி திறந்தது. விஜயா தென்பட்டாள். "கேள்விப்பட்டேன்" என்றாள் விஜயா, அவள் முகம் வாடித்தான் இருந்தது, பாவம்!

"என்னமோ பண்ணிக்கொண்டுவிட்டேன், விஜி!" என்று சொல்ல முடியாமல் சொன்னேன்.

நீங்கள் பண்ணிக்கொண்டது தவறா?" என்று கேட்டாள் அவள். "ஆண் வர்க்கத்திற்கு இது தவறா? என்றுதான் கேட்கிறாளோ? எனக்கு அவள் எதிரில் பேசவே கலக்கமாக இருந்தது. நான் செய்துவிட்ட தவறு அவள் வாழ்வைக் குலைத்துவிடுமோ என அஞ்சினேன்.

"வா, விஜி! நாம் இருவரும் எங்காவது போய் வாழ்வோம்!" என்று ஆவேசமுடன் மொழிந்தேன்.

விஜி லேசாக ஒரு வெற்றுச் சிரிப்புச் சிரித்தாள். "அவள்?" என்று கேட்டாள்.

"ஆம், அவள்!......... பாவம், அவள்!" தடுமாறினேன். "என்னமோ தெரியவில்லை, பண்ணிக்கொண்டுவிட்டேன்!" என்று கதறினேன்.

சாவதானமாக விஜி கேட்டாள், "ஒரு விஷயம் சொல்லணும், எனக்கு" என்றாள். அவளைப் பற்றி என் மனைவியாகிவிட்ட சரஸ்வதியைப் பற்றி தகவல்கள் சில கேட்டாள். சொன்னேன். சரஸ்வதி அதிகம் படித்தவளில்லை என்றும், விசேஷ அழகும் கொண்டவளல்ல என்றும், ஒரே ஒரு முறைதான் நான் அவளை வேண்டா வெறுப்பாகப் 'பெண் பார்த்தேன்' என்றும் சொன்னேன். தந்தையின் வற்புறுத்தலின்மேல்தான் பெண் பார்க்கவென்று போனதாகவும் சொன்னேன்.

"போதும், சங்கர், எனக்கு வேண்டிய தகவல் இவ்வளவுதான்" என்றாள் விஜி.

"நான் நிறையப் பேசணும், விஜி" என்றேன். மறுநாள் சொல்லலாம் என்று அவள் கூறவே ஒப்புக்கொண்டேன்.

மறுநாள் விஜயாவைக் கல்லூரியிலே காணவில்லை. அவள் தன் ஊர் போய்விட்டாளாம்!

முதலில் சற்றே துணுக்குற்றேனாயினும் பிறகு ஆறுதலே பெற்றேன்.

நான்கு நாட்களுக்கெல்லாம், நான் எதிர்பாராத கடிதங்கள் இரண்டு வந்தன.

"நெஞ்சிலே காதல் மட்டும் இருந்தால் போதாது என்பதை இப்போது நன்குணர்கிறேன். அன்பு செறிந்த ஒத்துழைப்பும் நெஞ்சிலே இருக்கவேண்டும். உங்கள் மனம் குளிரட்டும் என்று எண்ணாதவளாய் நான் உங்களையே என் வழி வர விரும்பினேன். பெண்ணாகிய நான் ஆடவர்களுடன் சகஜபாவம் குறைத்துக் கொண்டிருப்பின், என் பெண்மை உயர்வு பெற்றிருக்குமேயன்றி தாழ்வு பெற்றிருக்காது. ஆனால் எனக்கு உங்கள் உணர்ச்சிகளை மதிக்கும் ஆற்றல் இருக்கவில்லை. அதற்குச் சரியான தண்டனை பெற்றாச்சு, பெண்மை நிறைந்த பெண்ணாகிய சரஸ்வதி உங்களை ஒரே பார்வையில் கவர்ந்திழுத்துவிட்டாள். உங்களுக்கு இணையான இல்லாள் அவள்தான்.

விஜி எழுதிய கடிதம் இது, என் மனம் விஜியின்பால் அனுதாபமும் பரிவும் கொண்டது, "பலவீனங்கொண்டு சோர்ந்த நிலையிலிருந்த என் மனதை, சரஸ்வதி கவர்ந்துவிட்டது ஒரு விந்தையா, விஜி!" எனக் கேட்க வேணும்போலத் தோன்றியது.

கையிலிருந்த மற்றொரு கடிதத்தைப் பிரித்தேன். ஆ! சரஸ்வதி!

சிறு கடிதத்தின் ஒரு பெரும்பகுதியாக விளங்கிய இந்த விஷயம் என் கவனத்தைப் பிணைத்தது. மிளகு, இஞ்சி, ஆகியவற்றின் வாசனை முன்பெல்லாம் இவளுக்கு இஷ்டமே இல்லையாம்! என் தங்கை சொன்னாளாம், எனக்கு இந்த வாசனைகள் பிரியம் என்று! அதனால் சரஸ்வதியும் இப்பொழுது இஷ்டமுடன் இஞ்சி, மிளகு சேர்ந்த பண்டங்கள் புசிக்கிறாளாம். இவை போட்டு என்னென்ன பக்குவங்கள் செய்யலாமோ எல்லாம் கற்கிறாளாம் இப்பொழுது! நான் இன்பப் புன்னகை பூத்தேன். "சரஸ்வதி! சரசு! சரஸ்! சச்சு!" என்றெல்லாம் முணுமுணுத்தது என் அந்தரங்கம். ஆசையுடனும் ஆர்வமுடனும் நினைப்புக்கு இழுத்து வந்து நிறுத்தினேன், அவளுடைய உருவத்தை.

இதோ, விஜியின் கடிதம்!....... இரண்டு கடிதங்களுக்கும் பதிற் கடிதம் எழுத வேண்டுமா? என்னவென்று எழுதுவது? கடற்கரையையே நாடிச் சென்றேன், சிந்தனை செய்ய.

கடற்காதலரைப் பற்றி ஒரு பேச்சு வழங்குகிறதுண்டு. ஆண் அலை இழுத்துப்போய் விடும் பொருளை. இளகிய இயல்புள்ள பெண் அலை கரை சேர்த்துவிடுமாம்!

கடற்கரைக் காதலராக விஜயாவும் நானும் உலாவிய நாட்களிலே!.... விஜயா இளகா நெஞ்சமுள்ளவளாயும், நான் குழைவே உருவாகவும், விளங்கினோம். பெண்மைக்குரிய கனிவும், விட்டுக்கொடுக்கும் தன்மையும் அவளிடம் இருக்கவில்லை! உண்மை!

நிலையருகு காத்துக் கிடக்கும், புழுதியையும் சகதியையும் சுமந்து படுத்துக் கிடக்கும், மிதியடியை, புழுதி நீக்கிச் சுத்தம் செய்யும் வழி யாது? மிதியடியைத் தரையிலே அறைந்து மோதுவதுதானே! என் பெருமை எண்ணங்களை உலுக்கிவிட விஜயா கையாண்ட முறை இதுவே! மோகமாகிய ஏடு கட்டிவிட்டிருந்ததனால் என் மனமாகிய பால், நீர்த்து, பலமற்றுப் போயிருந்தது. விஜயா என் ஆண்மையையெல்லாம் மெல்ல மெல்ல ஒடுக்கினாள்! விடுமுறையின் துவக்கத்திலே அவளுடைய தோழமை விடுபட்டபோது, முதலில் மனம் பளுவாயிருப்பினும், பிறகு ஒரு சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டதல்லவா எனக்கு? அதன் பயனாகத்தான் தந்தையின் வார்த்தைகளுக்கு எளிதிலே செவி சாய்த்துவிட்டேன் போதும்!

பலவீனமுற்ற என் மனதை, சரஸ்வதி ஆட்கொள்ளவில்லை / பலம் பெற்று, புத்துயிர்பெற்ற என் மனதைத்தான் சரஸ்வதி வசீகரித்திருக்கிறாள். சரஸ்வதி அலாதிப்பெண்.

விஜயாவின் கடிதத்திற்கு விளக்கம் ஸரஸியின் கடிதம். ஸரஸியின் கடிதத்திற்கு விளக்கம் விஜியின் கடிதம். இரண்டு கடிதங்களுக்கும் இத்தகைய நெருங்கிய தொடர்பு இருப்பினும் நான் ஒரே ஒரு கடிதத்திற்குத்தான் பதில் விடுத்தேன், சரசுவுக்கு! சரசுவின் அன்புக் கட்டளை!

**************

(காவேரி, மே, 1951)